## இடைப்பாடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை
## ஆணை பிறப்பிப்பவர்: திரு.R.சேகர், B.E.,

ந.க.எண். 1984/2021/அ2

நாள். 14.12.2021

பொருள் மனைப்பிரிவு அங்கீகாரம் – இடைப்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட இடைப்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு –E பிளாக் –42 நகரளவை எண்–4/1 part, 4/8 பழைய சர்வே எண் 111/1 part–ல் 1.671/2 ஏக்கர் (அ) 72963.00 சதுரடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு (33 மனைகள்) இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை
1. நகர் .ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம் அவர்களின் உத்திரவு ந.க.எண்.2010/2021 சேம–3 நாள்.15.11.2021
2. வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் 02.12.2021–ல் செலுத்தப்பட்ட இரசீது நகல்
3. இந்நகரமன்ற தீர்மானம் எண். 606, நாள். 10.12.2021

------

<u>உத்திரவு</u>

இடைப்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு –E பிளாக் –42 நகரளவை எண்–4/1 part, 4/8 பழைய சர்வே எண் 111/1 part–ல் 1.671/2 ஏக்கர் (அ) 72963.00 சதுரடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண் 2010/2021/சேமா–3, நாள் 15.11.2021–ல் அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு ம.வ./மா.(சே)எண்.117/2021, வரன்முறை மனைப்பிரிவு எண்.28/2021–ல் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பூங்காக்கள் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்களால் தானபத்திரம் மூலம் 11.10.2021 (Doc No.3878/2021) –ல் பெறப்பட்டது. பார்வை 2–ல் மேற்படி மனைப்பிரிவில் விற்கப்படாத 33 மனைகளில் பூங்காக்கள் 3 (மனை எண் 6பகுதி,7,8,9)போக மீதமுள்ள 30 மனைகளுக்கு வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் உரிய தலைப்பில் செலுத்தப்பட்டதை தொடர்ந்து, மேற்படி மனைப்பிரிவிற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

<u>மனைப்பிரிவு நிபந்தனைகள்:</u>

1) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

2) மனையின் ஊடே நீர்வழி பாதை H.T. Line, L.T. Line ஆகியன செல்லுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.

3) மனைப்பிரிவு எல்லையிலுள் அரசு புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு கண்டறியப்பட்டால் கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

4) மனைப்பிரிவு அமையும் புல எண்களில் வழக்கு ஏதும் நிலுவையில் இருப்பது பின்னர் அறியப்பட்டால் மனைப்பிரிவுக்கு வழங்கிய ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆணையாளர்,
இடைப்பாடி நகராட்சி
14.12.2021

பெறுநர்

1. திரு வி.மோகன்குமார்,
2. திரு. எம்.செந்தில்குமார்
   க.எண்3 K பழையபேட்டை,
   நைனாம்பட்டி,
   இடைப்பாடி.

<u>நகல்.</u>

வருவாய் ஆய்வாளர்(பொ) இடைப்பாடி நகராட்சி,
காலியிடம் வரிவிதிப்பு செய்யும் பொருட்டு.